**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி**

**முன்னிலை : திருமதி. J. சங்கீதா, MBA., B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்**
**குற்றவியல் நடுவர், கடலாடி. (மு.கூ.பொ.)**

**2024 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17 ம் நாள் வியாழக்கிழமை**

**I.A.No.01/2023**
**in**
**O.S.No.12/2022**

1. அ.சிங்கம் லியோன் ...மனுதாரர்/வாதி

/எதிர்/

1. இ.அலங்காரம் பர்னாந்து
2. அ.ஆஸ்டர்
3. அ.யோகேஷ்
4. இ.அருளானந்தம் சிங்கம் பர்னாந்து
5. அ.யோவான்
6. அ.சஞ்சாய்
7. பி.மிக்கேல்
8. பி.இன்னாசி சூசை ராஜா ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த இடைநிலை மனு என் முன்பாக 17.10.2024 இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.B.பூமுருகன் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 8 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.வேலுச்சாமி அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.H.முரளிதரன் அவர்கள் ஆஜராகியும், இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**<u>உத்தரவு</u>**

1. இவ்வழக்கில் ஆணையர் ஒருவரை அவசரமாக நியமனம் செய்து அவர் மலமாக தாவா சொத்தை உபய தரப்பினர்கள் ஆவணங்கள் மற்றும் வருவாய் ஆவணங்கள் உதவியோடு சர்வேயர் ஒருவர் உதவி கொண்டு தாவா சொத்தை பார்த்து

SANGEETHA Digitally signed by SANGEETHA
Date: 2024.10.17
15:45:33 +0530

அளந்து அம்சங்களைக் குறித்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிடக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.**

பிராது வரைபடத்தில் கண்ட ABCDA பகுதி சொத்தே தாவா சொத்து என்றும், தாவா சொத்தின் விஸ்தீரணம் 1 ஏக்கர் 69-1/2 செண்ட் நிலம் என்றும், தாவா சொத்தில் 40 பனைமரங்கள் இருந்து வருகிறது என்றும், தாவா சொத்தாக காட்டப்பட்டுள்ள ABCDA பகுதி சொத்தும், தாவா சொத்தின் வடபுறம் கிழபுறமுள்ள பிராது வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள AEFGHIJKLMNOPQCVA பகுதி சொத்து முழுவதும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றும், பிரதிவாதிகள் தாவா சொத்தையும் அதன் வடக்குப்புறம் கிழக்குப்புறம் உள்ள சொத்துக்களையும் தன்னிடம் கிரையம் வாங்கிக் கொள்ளும்படி கேட்டதால் பிராது வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள வடமேற்குப் பகுதியில் EA லைனை ஒட்டி கிழக்கு்ப்புறம் இருந்த 2 ஏக்கர் 66 செண்ட் நிலத்தையும் அதில் இருந்த பனை விடலைகள், பனை மரங்களையும் சேர்த்து வழக்கில் கண்ட 7, 8 பிரதிவாதிகளுக்காகவும், அவருடைய தந்தை பிலவேந்திரன் மற்றும் பிலவேந்திரன் தனக்காகவும் சேர்த்து கடந்த 20.08.1987ம் தேதியன்று பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலம் கிரையம் கொடுத்துள்ளார் என்றும், அவர்கள் கிரையம் கொடுத்த 2 ஏக்கர் 66 செண்ட் நிலத்திற்கு நான்குமால் சொல்லும் பொழுது வடக்கில் பிலவேந்திரன் வகையறாவினர் சொத்து இருப்பதாகவும், கிழக்கே சந்தியாகு சொத்து இருப்பதாகவும், தெற்கே ராயப்பன் லியோன், மைக்கேல் அம்மாள் புஞ்சை நிலம் இருப்பதாகவும்,மேற்கே சந்த குரூஸ் புஞ்சை நிலம் இருப்பதாகவும் காட்டி கிரையம் கொடுத்துள்ளார் என்றும், அவ்வாறு அவ்விடத்தில் 2 ஏக்கர் 66 செண்ட் நிலத்தை கிரையம் வாங்கிய நான் சொத்தை கிரையம் வாங்கிய தேதியிலேயே அடைந்து அன்றிலிருந்து இன்று வரை அனுபவம் செய்து வருவதாகவும், பிராது வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள LM லைனை ஒட்டி ஆக கீழ்ப்புறத்தில் LM லைனுக்கு மேற்கில் 5 ஏக்கர் புஞ்சை நிலத்தை இவ்வழக்கில் கண்ட 1ம் பிரதிவாதியும் அவர் மக்களும், கடந்த 01.07.1992ம் தேதி எனக்கு சரியான கிரைய தொகைக்கு கிரையம் கொடுத்து சொத்தையும் எனது கைவச அனுபவத்தில் ஒப்படைத்துவிட்டார்கள் என்றும், LM லைனுக்கு மேற்கே நான் 1ம் பிரதிவாதி வகையறாவினரிடம் கடந்த 01.07.1992ம் தேதி

SANGEETHA Digitally signed by SANGEETHA
Date: 2024.10.17
15:45:40 +0530

கிரையம் வாங்கிய 5 ஏக்கர் நிலத்திற்கு மேற்கே மேலும் 5 ஏக்கர் நிலத்தை இவ்வழக்கில் கண்ட 1ம் பிரதிவாதி தனது அண்ணன் மனைவியான அதாவது பிலவேந்திரன் மனைவியான அடைக்கலம்மாள் என்பவரிடம் கடந்த 02.07.1992ம் தேதி அதிகார ஆவணம் பெற்று எனக்கு கடந்த 03.07.1992ம் தேதி கிரையம் கொடுத்து சொத்தையும் எனது கைவச அனுபவத்தில் ஒப்படைத்து விட்டதாகவும், அதே போல இவ்வழக்கில் கண்ட 1 முதல் 6 பிரதிவாதிகள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள 5 ஏக்கர் நிலத்திற்கு மேற்கே 5 ஏக்கர் நிலத்தை தனக்கு கடந்த 07.11.1994ம் தேதி ஆவண எண்.865/1994 கிரைய ஆவணம் மூலமாக கிரையம் கொடுத்து சொத்தையும் எனது கைவச அனுபவத்தில் ஒப்படைத்து விட்டதாகவும், அதேபோல இவ்வழக்கில் கண்ட 1 முதல் 6 பிரதிவாதிகள் தாவா சொத்தான 1 ஏக்கர் 69 ½ செண்ட் நிலத்துடன் கூடிய வடபுறம் 80 ½ செண்ட் நிலம் சேர்த்து ஆக மொத்தம் 2 ஏக்கர் 50 செண்ட் நிலத்தை கடந்த 08.11.1994ம் தேதி ஆவண எண். 878/1994 ஆவணம் மூலமாக கிரையம் கொடுத்து சொத்தையும் தனது கைவச அனுபவத்தில் ஒப்படைத்து விட்டார்கள் என்றும், மேற்படி சொத்துக்கு வடகிழக்குப்புறம் உள்ள 1 ஏக்கர் 64 செண்ட் நிலத்தை 4, 5 பிரதிவாதிகள் கடந்த 07.01.2000ம் தேதி ஆவண எண்.14/2000 மூலமாக கிரையத்தொகைக்கு கிரையம் கொடுத்து சொத்தையும் சரியான எனது கைவச அனுபவத்தில் ஒப்படைத்து விட்டதாகவும், இவ்வாறு தாவா சொத்து உட்பட 21 ஏக்கர் 80 செண்ட் நிலத்தை நான் கிரையம் பெற்று தன்னுடைய கைவச அனுபவத்தில் வைத்து அனுபவம் செய்து வருவதாகவும், இவ்வாறான நிலையில் தனக்கு கிரையப் பாத்தியப்பட்ட 21 ஏக்கர் 80 செண்ட்க்கும் என் பெயருக்கு பட்டா பெற்று அனுபவம் செய்து வந்த நிலையில் பிராது வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள கிழக்குப் பகுதியில் 2 ஏக்கர் நிலத்தை புனித அன்னாள் கல்வி குழுமத்திற்கு கிரையம் கொடுத்துள்ளதாகவும், அதன் அருகில் கிழக்குப்புறம் இருந்த 80 செண்ட் நிலத்தை முறையே ஆஸ்ட்ரின், மரிய மைக்கேல், பிரசாத், ஐவன் ராஜ், மரியஜெனோபிரிட், அலெக்ஸ், ரீஜெய், ரிசியா ஆகியோர்களுக்கு கிரையம் கொடுத்த சொத்து போக தாவா சொத்து உட்பட மீதமுள்ள 19 ஏக்கர் நிலத்தை நான் தன்னுடைய கைவச அனுபவத்தில் வைத்து அனுபவம் செய்து வந்து அதற்கு அரசுக்கு செலுத்த வேண்டிய வரி முதலானவைகளை செலுத்தி வருவதாகவும், இவ்வாறு தாவா சொத்தையும், அதன் வடக்குபுறம், கிழக்குபுறம் உள்ள

SANGEETHA Digitally signed by SANGEETHA
Date: 2024.10.17 15:45:46 +0530

சொத்தையும் கிரையம் வாங்கி பட்டா மாறுதல் செய்து என்னுடைய கைவச அனுபவத்தில் வைத்து அனுபவம் செய்து வரும் நிலையில் தாவா சொத்துக்கு எவ்வகையிலும் சம்மந்தம் இல்லாத பிரதிவாதிகள் ஒன்றுக்கூடிக்கொண்டு தாவா சொத்தை தாங்கள் தனக்கு விற்கவில்லை என்றும், தாவா சொத்தில் தனக்கு எந்த உரிமையும் இல்லை என்றும் தாவா சொத்தில் என்னுடைய உரிமையை கடந்த 01.03.2022ம் தேதி மறுத்து பிரச்சனை செய்துள்ளார்கள் என்றும், இவ்வழக்கில் கண்ட 1 முதல் 6 பிரதிவாதிகள் தாவா சொத்தை கடந்த 08.11.1994ம் தேதி கிரையம் கொடுத்தபோது அச்சொத்துக்கு வடக்கே தான் கடந்த 20.08.1987ம் தேதி 1ம் பிரதிவாதியான அலங்காரம் பர்னாந்து மற்றும் அருளானந்தம் சிங்கத்தோடு உடன்பிறந்த அண்ணான பிலவேந்திரன் என்பவரது பாகசொத்தை வாதி கிரையம் பெற்றுள்ளேன் என்பதை ஒப்புக்கொண்டும் அதற்கு தெற்கே உள்ள தாவா சொத்தை எனக்கு கிரையம் கொடுப்பதாகவும், அதே போல தாவா சொத்துக்கு மேற்கே சகாய ஸ்டீபன்ராஜ் அவர்களின் தந்தையாரான சூசை மாணிக்கம் சொத்து இருப்பதாகவும், அதற்கு கிழக்கே உள்ள சொத்தை கிரையம் கொடுப்பதாகவும், அதே போல தாவா சொத்துக்கு கிழக்கே எனக்கு கிரையப்பாத்தியப்பட்ட சொத்து இருப்பதாக ஒப்புக்கொண்டு அதற்கு மேற்கே உள்ள சொத்தை கிரையம் கொடுப்பதாகவும், அதேபோல தாவா சொத்துக்கு தெற்கே சந்தியாகு மார்டின், ஜெபமாலை மார்டின், சூசை மிக்கேல் மார்டின் சொத்துக்கள் இருப்பதாகவும் அதற்கு வடக்கே உள்ள சொத்தை கிரையம் கொடுப்பதாக சொல்லி தாவா சொத்தினுடைய சரியான நான்குமால்களை குறிப்பிட்டு கிரையம் கொடுத்ததாகவும், 1ம் பிரதிவாதியின் தந்தையாரான இன்னாசி பர்னாந்து மற்றும் அவர்கள் சகோதரர்கள் சர்வே எண்.231ல் கண்ட சொத்தில் ஆக நடுப்புறம் வடபுறத்தல் 1ஏக்கர் 12 செண்டு நிலத்தை ராயப்பன் லியோன் என்பவருக்கு கடந்த 13.04.1955ம் தேதி ஆவண எண்.716/1955 ஆவணம் மூலமாக கிரையம் கொடுத்துள்ளதாகவும், அந்த கிரையத்தை 1 முதல் 6 பிரதிவாதிகள் தனக்கு கடந்த 08.11.1994ம் தேதி எழுதிக் கொடுத்த கிரைய ஆவண எண்.808/1994 ஆவணத்தில் ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், ஏற்கனவே ராயப்பன் லியோன் அவர்களுக்கு 1ம் பிரதிவாதியின் தந்தை கிரையம் கொடுத்த சொத்துக்கு மேற்கிலும், தெற்கிலும், கிழக்கிலும் கிரையம் வாங்கி அனுபவம் செய்து 21 ஏக்கர் 80 செண்ட் நிலத்தில் தனக்கு பாத்தியப்பட்ட பிராது

SANGEETHA Digitally signed by SANGEETHA
Date: 2024.10.17 15:45:52 +0530

வரைபடத்தில் தாவா எனக் காட்டப்பட்டுள்ள ABCDA பகுதி சொத்தானது மொத்த சொத்தின் தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ள 1 ஏக்கர் 69½ செண்டு நிலத்தைப் பொறுத்தே தன்னுடன் பிரதிவாதிகள் தாவா செய்து வருவதாகவும், அச்சொத்தை ஏற்கனவே இவ்வழக்கில் கண்ட பிரதிவாதிகள் தனக்கு கடந்த 08.11.1994ம் தேதி கிரைய ஆவண எண்.878/1994ம் ஆவணம் மூலமாக கிரையம் கொடுத்து தாவா சொத்தையும் என்னுடைய கைவச அனுபவத்தில் ஒப்படைத்து தாவா சொத்தில் தான் வேலிக்கற்கள் அமைத்து அதில் வெள்ளை பெயிண்ட் அடித்து தாவா சொத்தில் உள்ள சுமார் 40 பனைமரங்களையும் பராமரித்து தன்னுடைய மொத்த சொத்துடன் சேர்த்து அனுபவம் செய்து வரும் நிலையில் தற்போது தாவா சொத்தானது தனக்குப் பாத்தியப்பட்டதில்லை என்று பிரதிவாதிகள் மறுப்பதிலிருந்து தங்களது நடத்தை ஒப்புதல், பதிவு செய்யப்பட்ட ஆவணகள் மூலமாக பிரதிவாதிகள் முரண்தடை தோஷத்தால் தடைபெற்றுள்ளதாகவும், தாவாச் சொத்தைப் பொறுத்து சரியான நான்குமால்கள் குறிப்பிட்டு 1 முதல் 6 பிரதிவாதிகள் கிரைய ஆவணத்தை எனக்கு எழுதிக்கொடுத்த விட்ட நிலையில் தாவாச் சொத்தைப் பொறுத்து பிரதிவாதிக்கு எந்த உரிமையும் இல்லை என்றும், தாவா சொத்தை பிரதிவாதிகள் கடந்த 08.11.1994ம் தேதி பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலமாக கிரையம் கொடுத்து தாவா சொத்தையும் இன்று வரை தனது கைவச அனுபவத்தில் வைத்து அனுபவம் செய்து வரும் நிலையில் பிரதிவாதிகள் தங்கள் செல்வாக்கை பயன்படுத்தி பெயரளவுக்கு தாவா சொத்தைப் பொறுத்து வருவாய்த்துறை அதிகாரிகள் மூலம் தங்கள் பெயருக்கு பட்டா பெற்றிருப்பதாக ஊரில் பிரஸ்தாபித்து வருவதாகவும், பிரதிவாதிகள் மோசடியாக பட்டா பெற்றிருந்தாலும் அதை வைத்து பிரதிவாதிகள் தாவாச் சொத்துக்கு எவ்வகையிலும் உரிமை கோர முடியாது என்றும், தாவா சொத்தை பிரதிவாதிகள் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலமாக தனக்கு கிரையம் கொடுத்த பின்பாக தற்போது தாவா சொத்துக்கு மோசடியாக பட்டாவை மாற்றிக்கொண்டு ஏற்கனவே தாவா சொத்தை எனக்கு கிரையம் கொடுக்கும் போது தாவா சொத்து தங்களுக்கு பாத்தியமில்லை என்றும், தற்போது தான் தங்கள் பெயருக்கு மோசடி பட்டா உள்ளது என்றும், எனவே தாங்கள் எனக்கு கடந்த 08.11.2004ம் தேதி கிரையம் கொடுத்ததே செல்லாதது என்று பிரதிவாதிகள் கடந்த 06.03.2022ம் தேதி வீணாக வாதியோடு பிரச்சனை செய்து தாவா

SANGEETHA Digitally signed by SANGEETHA Date: 2024.10.17 15:46:09 +0530

சொத்துக்குள் அத்துமீறி நுழைய முயற்சி செய்துள்ளதாகவும், பிரதிவாதிகள் தாவா சொத்தை கடந்த 08.11.2004 ம் தேதி கிரையம் கொடுக்கும்போது பிரதிவாதிகளுக்கு தாவா சொத்து உரிமையில்லாமல் இருந்து தற்போது பிரதிவாதிகள் பிரஸ்தாபிப்பது போல பிரதிவாதிகள் பெயருக்கு பிரதிவாதிகள் பெற்றுள்ள மோசடி பட்டா மூலமாக தற்போது தான் பிரதிவாதிகளுக்கு தாவாச் சொத்தைப் பொறுத்து உரிமை ஏற்பட்டுள்ளது என்று வைத்துக் கொண்டாலும் பிரதிவாதிகள் ஏற்கனவே எனக்கு எழுதிக்கொடுத்த 08.11.2004 ம் தேதி கிரைய ஆவணம் மூலமாக வாதி தாவாச் சொத்தைப் பொறுத்து உரிமையடைந்துள்ளதால் அந்த உரிமையை மறுக்க பிரதிவாதிகள் Doctrine of Estoppel-படி தடைபட்டுள்ளார்கள் என்றும், எதிர்வழக்குரைகளில் கூறியுள்ளது போல தாவா சொத்து என்பது பழைய சர்வே எண்.231, தற்போது சர்வே எண்.230/1 ஏ-ல் இல்லாதது போல குறிப்பிட்டுள்ளார்கள். மேலும் மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட சொத்துக்கள் சர்வே எண்.231/3 ஏ 1-ல் அமைந்துள்ளது என்றும், சொல்லும் என் கைவச அனுபவத்தில் உள்ள தாவாசொத்தானது பழைய சர்வே எண்.231, புதிய சர்வே எண்.230/1 ஏ-ல் உள்ளதா அல்லது சர்வே எண்.231/3 ஏ 1-ல் அமைந்துள்ளதா என்பதையும் தாவாச் சொத்துக்கான அம்சங்கள் என் வழக்கில் கண்டபடி பூமியில் உள்ளதா இல்லையா என்பதனையும் நிரூபிக்க வேண்டும் என்பதால் வழக்கில் ஆணையர் ஒருவரை நியமனம் செய்யக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **எதிர்மனுதாரர்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் பிரதிவாதிகள் தரப்பில் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகள் தவிர மற்றவை மறுக்கப்படுகிறது என்றும், தாவா சொத்து எந்த காலத்திலும் மனுதாரர்/வாதியின் பாத்திய, அனுபவத்தில் இருந்தது கிடையாது என்றும், தாவா சொத்தான சர்வே எண்.230/1A என்பது பழைய உட்பிரிவு எண்.230/1 என்றும், தாவா சொத்து ஆதியில் 1 ம் பிரதிவாதி அலங்காரம் பெர்னாந்து 4 ம் பிரதிவாதி அருளாந்து சிங்கம், 7, 8 பிரதிவாதிகளின் தகப்பனாரான பிளவேந்தரனை பெற்ற இன்னாசிபர்னாந்துக்கு பாத்திய அனுபவத்தில் இருந்து வந்து இன்னாசிபர்னாந்துக்கு பிறகு அவரின் ஆண் வாரிசுகளுக்கு கிடைக்கப்பெற்று சர்வே

SANGEETHA Digitally signed by SANGEETHA Date: 2024.10.17 15:46:18 +0530

எண்.230/1A க்கு நிலஉடமை மேம்பாட்டு திட்டத்தில் அவரது மக்களான பிளவேந்திரன், அலங்காரம், அருளாந்துசிங்கம் ஆகியோருக்கு 10.06.1987 ல் பட்டா எண்.728 கொடுக்கப்பட்டு பிரதிவாதிகளின் பாத்திய, அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும், பிராது பாரா III-1 ல் கண்ட பாராவில் மேலும் இதனடியில் கண்ட என்பதற்கு அடுத்து இடைச்செருகளாக பழைய சர்வே எண்.231, புதிய சர்வே எண்.230/1A ல் கண்ட என்று சேர்த்திருப்பது வழக்கு கோப்பிற்கு எடுப்பதற்காக செய்யப்பட்ட தவறான செயல் என்றும், வாதி பிராதுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் சர்வே எண்.231/3A1 விஸ்தீரணம் 7.69.35 தான் வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், பிராது வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள வடமேற்குப்பகுதியில் EA வை ஒட்டி கிழக்குப்புறம் இருந்த 2 ஏக்கர் 66 செண்ட் நிலத்தையும், அதில் இருந்த பனை விடலைகள், பனை மரங்களையும் சேர்த்து 7, 8 பிரதிவாதிகளுக்காக அவருடைய தந்தை பிலவேந்திரன் கடந்த 20.08.1987 ம் தேதி பதிவு கிரையம் மூலம் கிரையம் கொடுத்துள்ளது சர்வே எண்.231/3A1 என்றும், பிரதிவாதிகள் தாவா சொத்தையும் அதன் வடக்குப்புறம் கிழக்குப்புறம் உள்ள சொத்துக்களையும் வாதியிடம் கிரையம் வாங்கிக்கொள்ளும் படி கேட்டு அணுகியதால் பிராது வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள வடமேற்குப் பகுதியில் EA வைனை ஒட்டி கிழக்குப்புறம் இருந்த 2 ஏக்கர் 66 செண்ட் நிலத்தையும் அதில் இருந்த பனை விடலைகள், பனை மரங்களையும் சேர்த்து இவ்வழக்கில் கண்ட 7, 8 பிரதிவாதிகளுக்காகவும் அவருடைய தந்தையார் பிலவேந்திரன் மற்றும் பிலவேந்திரன் தனக்காகவும் சேர்த்து கடந்த 20.8.1987-ம் தேதி பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலம் கிரையம் கொடுத்துள்ளார்கள் என்று கூறப்பட்டுள்ள சொத்தானது சர்வே எண் 231/3A1-ல் கண்ட சொத்தைத்தான் கிரையம் கொடுத்து இருக்கிறார் என்றும், தாவா சொத்தை எந்த காலத்திலும் கிரையம் கொடுக்கவில்லை. தாவா சொத்திற்கும் வாதிக்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது என்றும், தாவா சொத்து முழுவதும் இந்த எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகளின் பாத்திய அனுபவத்தில் நாளதுதேதிவரை இருந்து வருகிறது. அதை வேண்டுமென்றே மறைத்து தாக்கல் செய்து இருக்கும் வழக்கும், கமிஷன் மனுவும் நிலைநிற்கதக்கதில்லை என்றும், அவ்வாறு அவர்கள் கிரையம் கொடுக்கும்போது அவர்கள் கிரையம் கொடுத்த 2 ஏக்கர் 66 செண்ட் நிலத்திற்கு நான்குமால் சொல்லும்பொழுது வடக்கில் பிலவேந்திரன்

SANGEETHA Digitally signed by SANGEETHA Date: 2024.10.17 15:46:24 +0530

வகையறாவினர் சொத்து இருப்பதாகவும், நிழக்கே சந்தியாகு சொத்து இருப்பதாகவும், தெற்கே ராயப்பன் லியோன், மைக்கேல் அம்மாள் புஞ்சை நிலம் இருப்பதாகவும், மேற்கே சந்த குரூஸ் புஞ்சை நிலம் இருப்பதாகவும், காட்டி கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றும், அவ்விடத்தில் 2 ஏக்கர் 66 செண்ட் நிலத்தை கிரையம் வாங்கிய வாதி சொத்தை கிரையம் வாங்கிய தேதியிலேயே அடைந்து அன்றிலிருந்து இன்று வரை அனுபவம் செய்து வருகிறார் என்று கூறிப்பது தாவா சொத்திற்கு சம்மந்தமில்லாதவை மேலே கூறியபடி சர்வே எண் 231/3A1-ல் தான் கிரையம் கொடுக்கப்பட்டது என்றும், வாதி ஏற்கனவே பிராது வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள LM லைனுக்கு மேற்கே வாதி 1-ம் பிரதிவாதி வகையறாவினரிடம் கடந்த 1.7.1992-ம் தேதி கிரையம் வாங்கிய 5 ஏக்கர் நிலத்திற்கு மேற்கே மேலும் 5 ஏக்கர் நிலத்தை இவ்வழக்கில் கண்ட 1-ம் பிரதிவாதி தனது அண்ணன் மனைவியான அதாவது பிலவேந்திரன் மனைவியான அடைக்கலம்மாள் என்பவரிடம் கடந்த 2.7.1992-ம் தேதி அதிகார ஆவணம் பெற்று வாதிக்கு கடந்த 3.7.1992-ம் தேதி கிரையம் கொடுத்த சொத்தையும் வாதியின் கைவச அனுபவத்தில் ஒப்படைத்து விட்டார் என்று கூறப்பட்டிருப்பது சர்வே எண்.231/3A1-ல் கண்ட சொத்து என்றும், 1 முதல் 6 பிரதிவாதிகள் மேலே குறிப்பிட்டுள்ள 5 ஏக்கர் நிலத்திற்கு மேற்கே 5 ஏக்கர் நிலத்தை வாதிக்கு கடந்த 7.11.1994-ம் தேதி ஆவண எண் 865/1994 கிரைய ஆவணம் மூலமாக கிரையம் கொடுத்து கொத்தையும் வாதியின் கைவச அனுபவத்தில் ஒப்படைத்துவிட்டார்கள் என்று கூறியிருக்கும் ஆவண எண் 865/1994 கண்ட சொத்தானது சர்வே எண் 231/3A1-ல் அடங்கும் என்றும், தாவா சொத்திற்கு எந்த வகையிலும் கட்டுப்படுத்தக்கூடிய ஆவணம் கிடையாது என்றும், வழக்கிற்காக பொய்யாக வாதியால் புனையப்பட்டிருக்கிறதே தவிர வேறோன்றுமில்லை என்றும், மேற்படி சொத்துக்கு வடகிழக்குப்புறம் உள்ள 1 ஏக்கர் 64 செண்ட் நிலத்தை 4, 5 பிரதிவாதிகள் வாதிக்கு கடந்த 7.1.2000-ம் தேதி ஆவண எண்.14/2000 ஆவணம் மூலமாக சரியான கிரையத்தொகைக்கு கிரையம் கொடுத்து சொத்தையும் வாதியின் கைவச அனுபவத்தில் ஒப்படைத்து விட்டதாகவும், தாவா சொத்து உட்பட 21 ஏக்கர் 80 செண்டு நிலத்தை வாதி கிரையம் பெற்று தன்னுடைய கைவச் அனுபவத்தில் வைத்து அனுபவம் செய்து வருகிறார் என்று கூறியிருப்பது பொய் என்றும், தாவா சொத்தான சர்வே எண் 230/1A வாதி கிரையம் வாங்கவுமில்லை,

SANGEETHA Digitally signed by SANGEETHA Date: 2024.10.17 15:46:30 +0530

அனுபவிக்கவுமில்லை என்றும், வாதி கிரையம் வாங்கியது சர்வே எண் 231/3A1-ல் தான் அவரின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும், தாவா சொத்துக்கும், வாதிக்கும் எந்தவித உரிமையும் கிடையாது என்றும், தாவா சொத்தான சர்வே எண் 230/1A இந்த பிரதிவாதிகளின் தனித்த பாத்திய அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும், அதனடிப்படையில் இந்த பிரதிவாதிகள் பெயரில் வருவாய்துறை ஆவணங்கள் அனைத்தும் தனித்து இருந்து வருகிறது என்பது உண்மையாக இருக்க வாதிக்கும் தாவா சொத்துக்கும் சம்மந்தமில்லாத நிலையில் நேரத்தை வீண் அடிக்கவேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் பொய்யா விபரங்களை கூறி மனுதார்/வாதி தாக்கல் செய்திருக்கும் கமிஷன் மனு சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும், ஏற்கனவே 1-ம் பிரதிவாதியின் தந்தையாரான இன்னாசி பர்னாந்து மற்றும் அவர்கள் சகோதரர்கள் சர்வே எண் 231-ல் கண்ட சொத்தில் ஆக நடுப்புறம் வடபுறத்தல் 1 ஏக்கர் 12 ½ செண்டு நிலத்தை ராயப்பன் லியோன் என்பவருக்குகடந்த 13.4.1955-ம் தேதி ஆவண எண் 716/1955 ஆவணம் மூலமாக கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றும், அந்த கிரையத்தை 1 முதல் 6 பிரதிவாதிகள் வாதிக்கு கடந்த 8.11.1994-ம் தேதி எழுதிக்கொடுத்த கிரைய ஆவண எண் 808/1994 ஆவணத்தில் ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்று கூறியிருப்பது தவறு என்றும், தாவா சொத்து தனித்த அம்சத்துடன் இந்த பிரதிவாதிகளின் பாத்திய அனுபவத்தில் இருந்து வருவதன் அடிப்படையில் இந்த பிரதிவாதிகளின் நாளது தேதிவரை வருவாய்துறை ஆவணங்களான அ" பதிவேடு நகல், அடங்கல் நகல், பட்டா 10(1) நகல், தனித்து காண்பிக்கக்கூடிய FMB கள் இருந்து வருகிறது என்றும், அந்த வகையில் வாதிக்கு தாவா சொத்தில் எந்த உரிமையும் கிடையாது என்றும், தாவா சொத்தான சர்வே எண் 230/1A என்பது பழைய உட்பிரிவு எண் 230/1 என்றும், ஷை தாவா சொத்து ஆதியில் 1-ம் பிரதிவாதி அலங்காரம் பெர்னாந்து, 4-ம் பிரதிவாதி அருளாந்து சிங்கம், 7, 8 பிரதிவாதிகளின் தகப்பனாரான பிளவேந்தரனை பெற்ற இன்னாசி பர்னாந்துக்கு, பாத்திய அனுபவமாய் இருந்து வந்து, இன்னாசி பர்னாந்துக்கு பிறகு அவரின் ஆண் வாரிசுகளுக்கு கிடைக்கப்பெற்று, அவர்களின் பாத்திய, அனுபவத்தின் அடிப்படையில் தாவா சொத்தான சர்வே எண் 230/1A-க்கு நிலஉடமைமேம்பாட்டு திட்டத்தில் ஷை லேட் இன்னாசி பர்னாந்து மக்களான 1.பிளவேந்திரன், 2. அலங்காரம், 3. அருளாந்து

SANGEETHA Digitally signed by SANGEETHA Date: 2024.10.17 15:46:37 +0530

சிங்கம் ஆகியோர்களுக்கு 10.6.1987-ல் 728-ம் நம்பர் பட்டா கொடுக்கப்பட்டு வை பிரதிவாதிகளின் பாத்திய, அனுபவத்தில் நாளதுதேதிவரை இருந்து வருவதனடிப்படையில் வருவாய்துறை ஆவணங்களிலும் இந்த பிரதிவாதிகளின் பெயரிலே நாளதுதேதிவரை இருந்து வருகிறது என்றும், பிரதிவாதிகள் தாவா சொத்தை வாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டு தற்போது தாவா சொத்து வாதியின் கைவச அனுபவத்தில் இருந்து வரும் நிலையில் பிரதிவாதிகள் தாவாசொத்தில் வாதியினுடைய உரிமையை மறுத்து வாதியோடு வீண் விவகாரம் செய்து வருவதால் தாவா சொத்தை பொறுத்து வாதியின் பாத்திய அனுபவங்களுக்கு ஈடு செய்ய முடியாத பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்று கூறியிருப்பது உண்மைக்குமாறானது என்பதால் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இந்த இடைநிலை மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5) இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர் தரப்பில் தாவா சொத்துக்களை ஆணையர் ஒருவரை நியமனம் செய்து தாவா சொத்தை வருவாய் ஆவணங்கள் மற்றும் சர்வேயர் உதவியோடு அளந்து அம்சங்களை கொண்டு வரைபடத்துடன் அறிக்கை தாக்கல் செய்ய மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்ய போதிய கால அவகாசம் வழங்கப்பட்ட பின்பும் எதிருரை தாக்கல் செய்யாததால் 13.08.2024ம் தேதியன்று எதிர்மனுதாரருக்கு வழங்கப்பட்ட வாய்ப்புகளில் எதிர்உரை தாக்கல் செய்யவில்லை என்பதால் மனுதாரர் கோரியுள்ளவாறு மேற்படி மனுவினை ஒருதலைபட்சமாக அனுமதித்து வழக்கறிஞர் திரு.M.ஜோதிமுருகன் அவர்கள் நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்யப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்நிலையில் தனக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து தான் தாக்கல் செய்துள்ள எதிருரையை ஏற்றுக்கொள்ள எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனு இ.ம.எண்.01/2024 ஆக கோப்பிற்கு

SANGEETHA Digitally signed by SANGEETHA Date: 2024.10.17 15:46:42 +0530

எடுக்கப்பட்டு மேற்படி மனு அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையில் எதிர்மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவு ரத்து செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இருதரப்பும் கேட்கப்பட்டது. தாவா சொத்து பிரதிவாதிகளின் தனித்த அனுபவத்தில் உள்ள சொத்து என பிரதிவாதிகள் தரப்பில் வாதம் செய்யப்பட்டுள்ளது.

சர்வே எண்.230/1A ல் கண்ட 1 ஏக்கர் 69 செண்ட் நிலத்தை பொறுத்து மட்டுமே வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதிக்கு தாவா சொத்தை பிரதிவாதிகள் தான் கிரையம் கொடுத்ததாக வாதிகள் தரப்பில் உரிமை கோரப்பட்டுள்ளது. கடந்த 08.11.1994 ம் தேதியன்று கிரைய ஆவண எண்.808/1994 ஆக பதிவு செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்பதாக வாதிகள் தரப்பில் வாதம் செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் பிரதிவாதிகள் தரப்பில் சர்வே எண்.231/3A1 ல் கண்ட சொத்தில் கிரையம் செய்து கொடுத்ததாக எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி விபரங்களை வழக்கின் விசாரணையின் முடிவிலேயே தீர்வு காணமுடியும் என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. தாவா சொத்தினை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்கும் பட்சத்தில் மேற்படி ஐயப்பாட்டிற்கு தீர்வு காண இயலும் என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொண்டு மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவினை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

முடிவாக, மனு அனுமதிக்கப்பட்டு, வழக்கறிஞர் **திரு.M.ஜோதிமுருகன்** இவ்வழக்கின் தாவா சொத்தை அளந்து அறிக்கையாக தாக்கல் செய்ய ஆணையராக நியமனம் செய்து உத்தரவிடப்படுகிறது. வழக்கறிஞர்/ஆணையர் தபசில் சொத்தை சர்வேயர் உதவியுடன் இயற்கை தன்மைகளை அளந்து வரைபடத்துடன் அறிக்கையாக தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. இரு தரப்பினரும் தாவா சொத்தை அளப்பதற்கு வழக்கறிஞர்/ஆணையருக்கு உதவி புரிந்திட வேண்டுமென்றும், வழக்கறிஞர்/ஆணையர் இந்நீதிமன்றத்தில் ஆணையர் அறிக்கையை வரும் 26.11.2024 ம் தேதியன்று தாக்கல் செய்ய வேண்டுமென்றும், வழக்கறிஞர் ஆணையர் ஊதியமாக ரூ.5,000/- நிர்ணயிக்கப்பட்டு மேற்படி தொகையை ஆணையர் அறிக்கை தாக்கல் செய்யும்போது ஆணையருக்கு நேரடியாக அளிக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. அழைக்க 26.11.2024.

SANGEETHA Digitally signed by SANGEETHA Date: 2024.10.17 15:46:49 +0530

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 17.10.2024 இன்று அவையறிய பகரப்பட்டது.

SANGEETHA Digitally signed by SANGEETHA Date: 2024.10.17 15:46:55 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.(மு.கூ.பொ)

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:**

இல்லை.

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:**

இல்லை.

SANGEETHA Digitally signed by SANGEETHA Date: 2024.10.17 15:47:02 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.(மு.கூ.பொ)

I.A.No.01/2023
in
O.S.No.12/2022

Date:17.10.2024
IA order